[1972 நவம்பர் 13

இராஜா மிராசுதார் (அரசு) மருத்துவ மனை, தஞ்சாவூர்

திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், இராஜா மிராசுதார் (அரசு) மருத்துவ மனையிலுள்ள குளிரூட்டு இயந்திரத்தின் அழுத்த மோட்டார் **(Compression motor of the cooling plant)** *பழுதான காரணத்தால் இம்மருத்துவ மனையின் எக்ஸ்ரே துறைப் பணிகள் தடைப்பட்டுள்ளனவா ?*

(இ) ஆமெனில், அந்த மோட்டார் எவ்வளவு காலமாகப் பழுதடைந்த நிலையிலுள்ளது ?

(உ) அதையொட்டி, எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *(அ) ஆம்.*

(இ) 1970, ஆகஸ்டு திங்கள் முதல் அந்தக் கருவி பழுதடைந்திருந்தது.

(உ) கிண்டி மின்-மருத்துவ சாதனங்களுக்கான செப்பனிடுதல்—பழுது பார்க்கும் பிரிவிடம் இந்த இயந்திரம் 31—8—1970 முதல் ஒப்படைக்கப்பட்டு முறையாகப் பழுது பார்க்கப்பட்டபின் 4—11—1971-ல் திரும்பப் பெறப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்ட காலத்தில் எக்ஸ்-கதிர்த்துறை இடையூறின்றிப் பணியாற்றியது.

Incidence of rabies in Coonoor area

* 274 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the incidence of rabies in Coonoor area in this State; and

(*b*) if so, the action taken thereon?

1972 நவம்பர் 13]

குன்னூர் பகுதியில் வெறி நாய்க்கடி நோய்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள குன்னூர் பகுதியில் வெறி நாய்க்கடி நோய் பெருவாரியாகப் பரவியுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) வெறி நாய்க்கடி நோய் கூனூர் வட்டாரத்தில் மட்டுமல்லாமல், மாநிலம் முழுவதும் ஏற்படுகிறது. வெறி நோய் மாநிலம் முழுவதிலுமுள்ள நாய்களுக்குரியதாகும். நாய்க்கடிகளில் 95 சதவிகிதம் உடையவர் இன்றி சுற்றித் திரியும் நாய்களால்தாம் ஏற்படுகின்றன. தங்கள் எல்லேகளுக்குள் உடையவரின்றிச் சுற்றித் திரியும் வெறி பிடித்த நாய்களின் எண்ணிக்கையை அடியோடு ஒழிக்குமாறு நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் கட்டளேகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தங்கள் எல்லேக்குள் நகராட்சிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வெறிகொண்ட விலங்குகளினல் கடிபட்டவர்களுக்கு மருத்துவ மனேகளில் சிகிச்சையளிக்கப்படுகிறது. கூனூர் வட்டாரத்தில் நாய்களால் கடிபட்டவர்களுக்கு, கூனூர் அரசு மருத்துவ மனேயிலும், பாஸ்டர் நிலேயத்திலும் சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, vhether special instructions will be given to Municipalities and Local Bodies to take action to prevent this meanace, as it vill be impossible to control the epidemics of rabies because there are a number of stray dogs in our municipal areas ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவரவர்களே, நகராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும் வெறி பிடித்த நாய்கள் திரியாதவாறு இருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சுற்றறிக்கை ஏற்கெனவெ இருக்கிறது. எந்தப் பகுதியிலாவது அந்த நாய்கள் மிகுதி என்று தெரியுமானுல், உடனடியாக அந்த நகராட்சி மன்றத்திற்குத் தெரிவித்து நடவடிக்கை

எடுக்குமாறு அரசு கேட்டுக்கொள்ளும். குறிப்பாக இந்த ஒரு ஆண்டில் இந்த வெறி நாய் கடிபட்டவர் அதிகம் என்று சொல்லத் தக்க வகையில் அரசாங்கத்திற்கு குறிப்பில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, நகரசபைகளும் மாநகராட்சிகளும் வெறி பிடித்த நாய்களை அடியோடு அகற்றுவதற்கு, குறைப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன, எந்த முறையில் நாய்களைப் பிடிக்கிறார்கள் அல்லது வேறு என்ன செய்கிறார்கள், அவைகளைப் பிடித்து பிறகு என்ன செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இங்கே விளக்கம் இந்த விடையில் காணப்படவில்லையென்று சொன்னாலும், வெறி பிடித்த நாய்களை ஊழியர்கள் கண்டுபிடித்துக் கொல்லுவது ஒன்றுதான் இன்றைக்குள்ள ஒரே வழி.

Government Hospital, Erode

* 275 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any representation has been received for upgrading the Government Hospital at Erode into District Headquarters Hospital and appointing a District Medical Officer; and

(*b*) if so, the action taken thereon by the Government?

அரசினர் மருத்துவமனை, ஈரோடு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். சி செங்கோட்டு வேலப்ப கவுண்டர் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஈரோட்டிலுள்ள அரசினர் மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தி மாவட்ட மருத்துவ அதிகாரி D.M.O.) நியமனம் செய்யக் கோரி வேண்டுகோள் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?